## நெல்லை அருகே பரபரப்பு

# ஆசிரியர் கண்டித்ததால் மாணவன் தற்கொலை

● பள்ளி வேன்களுக்கு தீ ● உறவினர்கள் மறியல் ● 50 பேர் மீது வழக்கு

**வீரவநல்லூர், ஜூலை 19:** நெல்லை அருகே ஆசிரியர் கண்டித்ததால் 10ம் வகுப்பு மாணவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் எதிரொலியாக பள்ளி வேன்களுக்கு மர்மநபர்கள் தீ வைத்தனர். மறியலில் ஈடுபட்ட தந்தை உட்பட 50 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

நெல்லை மாவட்டம், வீரவநல்லூர் அருகே மானாபரநல்லூர் வடக்கு தெருவை சேர்ந்தவர் சங்கரகுமார் (45), விவசாயி. இவரது மனைவி முத்துலட்சுமி. இவர்களது மகன் சபரிகண்ணன் (15). இவர் அங்குள்ள தனியார் மெட்ரிக்குலேசன் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார். அவரை கடந்த 4ம் தேதி பள்ளி ஆசிரியர்கள் கண்டித்துள்ளனர். இதில் மனமுடைந்த அவர், கடந்த 7ம் தேதி பள்ளிக்கு வயலுக்கு பயன்படுத்தும் களைக்கொல்லி மருந்தை குடித்துள்ளார். மைதானத்தில் பிரார்த்தனை நிகழ்ச்சி நடந்தபோது சபரிகண்ணன் மயங்கி விழுந்தார்.

ஆசிரியர்கள் அவரை மீட்டு சேரன்மகாதேவி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்த பின்னர் மேல் சிகிச்சைக்காக அவரது உறவினர்கள் சபரி கண்ணனை மதுரை தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு 10 நாட்கள் சிகிச்சையில் இருந்த சபரிகண்ணன், நேற்று முன்தினம் காலை பரிதாபமாக இறந்தார். இதையடுத்து சபரிகண்ணனின் உறவினர்கள் நெல்லை-அம்பை மெயின் ரோட்டில் வீரவநல்லூர் போலீஸ் ஸ்டேஷன் முன்பு மாணவனின் உடல் வந்த ஆம்புலன்சுடன் நேற்று முன்தினம் இரவு மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்த போலீஸ் அதிகாரிகள் வந்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது மாணவன் தற்கொலைக்கு காரணமான பள்ளி தாளாளர், தலைமை ஆசிரியர், வகுப்பு ஆசிரியை கள் உள்ளிட்ட 5 பேர் மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று உறவினர்கள் வலியுறுத்தினர். உயரதிகாரிகளின் பேச்சுவார்த்தைக்கு பின்னர் சபரிகண்ணனின் உறவினர்கள் மறியலை கைவிட்டு மானாபரநல்லூர் சுடுகாட்டில் மாணவனின் உடலை தகனம் செய்தனர். இந்நிலையில் இரவு 11.30 மணி அளவில் பள்ளியின் பக்கவாட்டு வழியே வளாகத்திற்குள் புகுந்த மர்மநபர்கள், அங்கு நிறுத்தப்பட்டிருந்த 2 பள்ளி வேன்களுக்கு தீ வைத்துள்ளனர். இதில் 2 வேன்களும் முற்றிலும் கருகி நாசம் அடைந்தன.

தகவலறிந்து சேரன்மகாதேவி தீயணைப்பு வீரர்கள் வந்து தீ வகுப்பறைகளுக்கு பரவாமல் அணைத்தனர். இதையடுத்து மாணவனின் மரணம் குறித்து ஒரு வழக்கு, சாலை மறியலில் ஈடுபட்டதாக மாணவனின் தந்தை, வக்கீல்கள் 4 பேர் உள்பட 50 பேர் மீது ஒரு வழக்கு, வேன் தீவைப்பு சம்பவம் தொடர்பாக ஒரு வழக்கு என 3 வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

பள்ளி வளாகத்தில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவான உருவத்தை வைத்து விசாரித்ததில் வேன்களுக்கு தீ வைத்தது அரிகேசவநல்லூரை சேர்ந்த கல்லூரி மாணவன் அரிஹரன் (18) என்பவரை நேற்று போலீசார் கைது செய்தனர். தலைமறைவாக உள்ள வெள்ளங்குளியை சேர்ந்த கல்லூரி மாணவன் அருண் (18) என்பவரை தேடி வருகின்றனர். இந்த சம்பவத்தால் பள்ளிக்கு நேற்று விடுமுறை விடப்பட்டது.


▶ மாணவன் தற்கொலை விவகாரத்தில், தீவைக்கப்பட்டதில் கொழுந்துவிட்டு எரியும் பள்ளி வேன்கள்.



## கொடநாடு பங்களாவை ஆய்வு செய்ய மீண்டும் மனு

**ஊட்டி, ஜூலை 19:** கொடநாடு எஸ்டேட்டில் நடந்த கொலை, கொள்ளை வழக்கு ஊட்டியில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 7 ஆண்டுக்கு மேலாக நடந்து வருகிறது. இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள கேரள மாநிலத்தை சேர்ந்த வாளையார் மனோஜ் நேரில் ஆஜரானார்.

இந்நிலையில், பங்களாவை ஆய்வு மேற்கொள்ள வழக்கின் 10வது குற்றவாளியான ஜித்தின் ஜாய் சார்பில் மீண்டும் மனு அளிக்கப்பட்டது. அந்த மனுவை நீதிபதி விசாரணைக்கு ஏற்றுக் கொண்டார். அதே சமயம், கொடநாடு பங்களாவை இது வரை 7 முறை சிபிசிஐடி., போலீசார் சோதனை செய்துள்ளதால், மேற்கொண்டு சோதனை செய்ய தேவையில்லை என்று அரசு தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இரு தரப்பு வாதத்தையும் கேட்ட நீதிபதி முரளிதரன் விசாரணையை ஆகஸ்ட் மாதம் 14ம் தேதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார்.

## மயிலாடுதுறை டிஎஸ்பி மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள்

# எஸ்பி, இன்ஸ்பெக்டரிடம் டிஐஜி நேரில் விசாரணை

**மயிலாடுதுறை, ஜூலை 19:** மயிலாடுதுறை டிஎஸ்பி மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. இது தொடர்பாக தஞ்சை சரக டிஐஜி ஜியாவுல் ஹக் நேற்று எஸ்பி மற்றும் இன்ஸ்பெக்டரிடம் விசாரணை நடத்தினார்.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மதுவிலக்கு அமலாக்கு பிரிவு டிஎஸ்பி சுந்தரேசனின் வாகனத்தை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், விஐபி பாதுகாப்பு பணிக்கு மாற்றிவிட்டு பழுதடைந்த வாகனத்தை கொடுத்ததாகவும் அந்த வாகனம் தனக்கு தேவையில்லை என்று ஒப்படைத்துவிட்டு அவர் வீட்டிலிருந்து நடந்தே அலுவலகம் சென்றுள்ளார். இது குறித்த வீடியோ வைரலானது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை டிஎஸ்பி சுந்தரேசன் அளித்த பேட்டியில், காஞ்சிபுரம் ஓய்வு பெற்ற இன்ஸ்பெக்டர் கஸ்தூரி கொலை வழக்கில் தனது விசாரணை அறிக்கையை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி, உயர் அதிகாரிகள் தூண்டுதல் பெயரில் எஸ்பி, தனது வாகனத்தை எடுத்துக்கொண்டு மனரீதியாக தன்னை டார்ச்சர் செய்து வருகிறார். நேர்மையான போலீஸ் அதிகாரியான தனக்கு நான்கு மாதம் சம்பளம் வழங்கப்படாத நிலையில் தான் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்துள்ளேன். ஆனால் நான் ஓய்வு பெறக்கூடாது என்பதற்காக சஸ்பெண்ட் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நான் லஞ்சம் வாங்கியது நிரூபிக்கப்பட்டால் அலுவலக வாசலிலேயே தூக்கில் தொங்க தயார்' என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று மயிலாடுதுறை மாவட்ட கண்காணிப்பு அலுவலகத்தில் இருந்து டிஎஸ்பி சுந்தரேசன் மீது குற்றச்சாட்டுகள் குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: 2005-2006 நந்தம்பாக்கத்தில் டிஎஸ்பி சுந்தரேசன் பணிபுரிந்த போது வழக்கு ஆவணங்களை முறையாக பராமரிக்கவில்லை என ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வள்ளியூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது ஒருவர் மீது குற்ற வழக்குகள் இருப்பதை மறைத்து பாஸ்போர்ட் வழங்க பரிந்துரைத்ததாக குற்றச்சாட்டு உள்ளது. சென்னை துரைப்பாக்கம் எல்லையில் 2 டாஸ்மாக் கடை மேலாளர்களை மிரட்டி சட்டவிரோதமாக மது விற்றதாக மாதம் ரூ.3000 வாங்கியதாக குற்றச்சாட்டு உள்ளது.

துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது பெண்ணிடம் புகார் வாங்காமல் செல்போன் எண்ணை வாங்கிக் கொண்டு பழகி வந்ததாக குற்றச்சாட்டு உள்ளது. தனக்கு பழக்கமான பெண்ணுக்கு உதவி ஆணையர் அலுவலகத்தில் வைத்து தரக்குறைவாக பேசி அடித்ததாகவும் குற்றச்சாட்டுள்ளது. 2008ல் துரைப்பாக்கம் காவல் எல்லையில் முடிவுற்ற வழக்கை சுட்டிக்காட்டி மிரட்டி ரூ.40,000 கையூட்டு வாங்கியதாக சுந்தரேசன் மீது குற்றச்சாட்டு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று மயிலாடுதுறைக்கு வந்த தஞ்சாவூர் சரக டிஐஜி ஜியாவுல் ஹக், மாவட்ட கண்காணிப்பு அலுவலகத்தில் எஸ்பி மற்றும் தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர் ஆகியோரிடம் டிஎஸ்பி மீது உள்ள குற்றச்சாட்டுகள் பற்றி விளக்கமாக கேட்டறிந்தார். இந்த விசாரணை மாலை வரை நடந்தது.


▶ சுந்தரேசன்

## தனியார் கோயில் நிர்வாகியிடம்

# ரூ.1.50 லட்சம் லஞ்சம் பெண் அதிகாரி கைது

**கோவை, ஜூலை 19:** கோவை மாவட்டம் சூலூர் அருகே பாப்பம்பட்டி கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு பாத்தியப்பட்ட லட்சுமி அம்மன் கோயில் குலதெய்வ கோயில் உள்ளது. இதை தனி நபர்கள் பராமரித்து வந்தனர். இதன் ஆண்டு வருமானம் ரூ.40 லட்சமாக இருந்து வருகிறது.



கோயிலில் நிதி மேலாண்மை முறையாக இல்லை என்பதால் இந்த கோயிலை இந்து சமய அறநிலைய துறையின் கீழ் கொண்டு வர நிர்வாகிகளில் ஒருவரான ரத்தினபுரியை சேர்ந்த சுரேஷ்குமார் (52), இந்து சமய அறநிலையத் துறைக்கு மனு அளித்திருந்தார். சென்னை உயர்நீதிமன்றமும் இது தொடர்பாக 12 வாரங்களில் நடவடிக்கை எடுக்க இந்து சமய அறநிலையத்துறைக்கு உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் சுரேஷ்குமார் மனு மீது நடவடிக்கை எடுத்து, கோயிலை இந்து சமய அறநிலைய துறையின் கீழ் கொண்டு வருவதற்கு ரூ.3 லட்சம் லஞ்சம் கொடுக்க வேண்டும் என உதவி கமிஷனர் இந்திரா (54) கேட்டுள்ளார்.

பேரம்பேசி முடிவாக ரூ.1.50 லட்சம் தருமாறு இந்திரா கேட்டுள்ளார். இதை நேற்று முன்தினம் இரவு கோவை இந்து சமய அறநிலையத்துறை அலுவலகம் அருகில் உள்ள பாரதியார் சாலையில் இந்திராவிடம் சுரேஷ்குமார் கொடுத்து உள்ளார். அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் இந்திராவை கைது செய்தனர். விசாரணைக்கு பின், நேற்று அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
பிராந்திய அலுவலகம்,
2ஆம் தளம், எண்.10, C.P. ராமசாமி சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018

**ஈக்காடுதாங்கல், கொட்டிவாக்கம், MKB நகர், நெசப்பாக்கம், தரமணி மற்றும் பெரம்பூர் மார்கெட் கிளைகளுக்கு இடம் தேவை**

பாங்க் ஆப் பரோடா, பிராந்திய அலுவலகம், சென்னை பெருநகர பிராந்தியம். இரு உறை முறையில் நில உரிமையாளர்கள் மற்றும் கட்டிட உரிமையாளர்களிடமிருந்து தேவையான மின் வசதிகளுடன் கூடிய தோராயமாக **1800-2350** சதுர அடி பரப்பளவு கொண்ட இடத்தை தரைதளத்தில் தங்களது கிளைகளுக்கு 1. **ஈக்காடுதாங்கல்**, 2. **கொட்டிவாக்கம்**, 3. **MKB நகர்**, 4. **நெசப்பாக்கம்**, 5.**பெரம்பூர் மார்கெட்** 6. **தரமணி** ஆகிய இடங்களில் வாடகை / லீஸ் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறது. பொதுத்துறை நிறுவனங்கள் / அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வளாகம் அனைத்து அம்சங்களிலும் தயாராக இருக்க வேண்டும் அல்லது இடம் தேர்வு செய்த தேதியிலிருந்து உபயோகத்திற்கு தயாராக இருக்க வேண்டும். விருப்பமுள்ளவர்கள் தங்களது ஒப்பந்தப்புள்ளிகளை தனித்தனியாக இரு உறைகளில் தொழில்நுட்பபுள்ளி மற்றும் விலைப்புள்ளி என்று உறையின் மேல் குறிப்பிட்டு **துணைப் பொது மேலாளர்**, பேங்க் ஆஃப் பரோடா, பிராந்திய அலுவலகம், 2ஆம் தளம், எண்.10 C.P. ராமசாமி சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018 என்ற விலாசத்திற்கு **07.08.2025** மாலை **4.00** மணிக்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். மேலும் விபரங்களுக்கு எங்களுடைய இணையதளம் **www.bankofbaroda.com.** ஒப்பந்தப்புள்ளி பிரிவின் கீழ் பார்க்கவும். தொடர்புக்கு :- **044-23454219, 9677244156.** ஒப்பந்தப்புள்ளிகளை எந்தவித காரணமும் தெரிவிக்காமல் ஏற்க / நிராகரிக்க வங்கிக்கு அதிகாரமுண்டு.

**துணைப் பொது மேலாளர் & பிராந்திய தலைவர், பிராந்திய அலுவலகம், சென்னை மெட்ரோ பிராந்தியம்**

## மடப்புரம் கோயில் காவலாளி மரண வழக்கு

# 5 பேரிடம் 8 மணிநேரம் சிபிஐ தீவிர விசாரணை

**மதுரை, ஜூலை 19:** சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் (28), போலீஸ் விசாரணையில் தாக்கப்பட்டு மரணம் அடைந்த வழக்கை சிபிஐ டிஎஸ்பி மோகித்குமார் தலைமையிலான குழுவினர் விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் அஜித்குமாருடன் தாக்கப்பட்ட ஆட்டோ டிரைவர் அருண், அஜித் நண்பர்கள் பிரவீன், வினோத், அஜித்தின் தம்பி நவீன்குமார், கோயில் ஊழியர் கார்த்திகைவேல் ஆகிய 5 பேரும் மதுரை சிபிஐ அலுவலகத்தில் ஆஜராக சம்மன் வழங்கப்பட்டது. அதன்படி 5 பேரும் மதுரை ஆத்திக்குளத்தில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் நேற்று காலை ஆஜராகினர். அவர்களிடம் 8 மணி நேரத்திற்கும் மேலாக சிபிஐ டிஎஸ்பி மோகித்குமார் தலைமையிலான குழுவினர் தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையின்போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சாட்சிகள் அளித்த பதில் விபரங்களை உடனுக்கு உடன் கம்ப்யூட்டரில் பதிவேற்றம் செய்து கொண்டனர்.

### கைதான ஏட்டு செல்போன் பறிமுதல்

மடப்புரம் கோயில் ஊழியர் அஜித்குமார் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள குற்றப்பிரிவு ஏட்டு ராஜாவின் வீடு திருப்பாச்சேத்தி அருகே மழவராயனேந்தலில் உள்ளது. நேற்று முன்தினம் இரவு சிபிஐ குழுவினர், ராஜாவின் வீட்டில் சோதனை நடத்தியுள்ளனர். அவர் புதிதாக கட்டி வரும் வீடு குறித்த ஆவணங்களை அவரது மனைவியிடம் கேட்டு வாங்கினர். ராஜாவின் 2 செல்போன்களையும் பறிமுதல் செய்து தடயவியல் ஆய்விற்கு அனுப்ப உள்ளனர்.

## நாமக்கலில் 2வது நாளாக அதிகாரிகள் விசாரணை

# ரூ.4 லட்சத்துக்கு கிட்னியை விற்றேன்

**பெண் அதிர்ச்சி தகவல்**

**பள்ளிபாளையம், ஜூலை 19:** நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம், குமாரபாளையம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் தொழிலாளர்களின் ஏழ்மை நிலையை பயன்படுத்தி, கிட்னி கொடுத்தால் 5 லட்சம் ரூபாய் வரை கொடுப்பதாக ஆசை காட்டி புரோக்கர்கள் அழைத்துச் செல்வதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக நாமக்கல் மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குனர் ராஜ்மோகன் நேற்று முன்தினம் நேரில் விசாரணை நடத்தினார். நேற்று 2வது நாளாக மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குனர் ராஜ்மோகன், பள்ளிபாளையம் பகுதியில் முகாமிட்டு விசாரணை மேற்கொண்டார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், தொழிலாளர்களிடம் பணஆசையை தூண்டி கிட்னியை பெறுவதாக சமூக வலைதளங்களில் எழுந்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாக இரண்டு நாட்களாக பள்ளிபாளையம் ஆவாரங்காடு, அன்னை சத்யாநகர், அக்ரஹாரம் உள்ளிட்ட பகுதிகளில் சிறுநீரகம் தானம் செய்தவர்களிடம் நேரில் விசாரிக்கப்பட்டது. விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்களை தூண்டி கிட்னி கொடுக்க மருத்துவமனைகளுக்கு அழைத்துச்சென்றதாக கூறப்படும் புரோக்கர்களை தேடி வருகிறோம் என்றார். அரசு மருத்துவர் வீரமணி பள்ளிபாளையம் காவல் நிலையத்தில் நேற்று அளித்த புகாரில், பெண்களை ஏமாற்றி கிட்னி பறித்ததாக சமூக வலைதளங்களில் புகார் கிளம்பியுள்ளது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கூறியுள்ளார். இதனால் போலீசாரும் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், பள்ளிபாளையம் ஆவாரங்காடு பகுதியை சேர்ந்த விசைத்தறி பெண் தொழிலாளி ஒருவர் கூறுகையில், குடும்பத் தேவைக்காக மகளிர் குழுக்களில் கடன் வாங்கினோம். வாழ்க்கை நடத்துவதற்கான வருமானம் போதாததால் குழுக்கடனை திருப்பி செலுத்த முடியவில்லை. அக்கம் பக்கத்தினரிடம் கடன் வாங்கி குழுக்கடனை செலுத்தினோம். கடன் சுமை அதிகமாகி விட்டதால் வேறு வழி தெரியவில்லை. இதனால் கிட்னியை விற்றேன். இதற்காக 4 லட்சம் கொடுத்தார்கள். அதை பெற்று வாங்கிய கடனை திரும்ப செலுத்தியுள்ளேன். எனது கணவரும் கிட்னி கொடுத்துள்ளார் என்றார்.

### இயக்குனர் தலைமையில் விசாரணை அமைச்சர் உத்தரவு

கிட்னி தொடர்பாக தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குனர் வினீத் தீர விசாரித்து அறிக்கையை அரசுக்கு இரண்டு வாரத்திற்குள் அளிக்க வேண்டும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவிட்டுள்ளார்.

**சிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 501, சால்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புது டெல்லி-110025
CIN:U65900DL2020PLC366027

**ஏல அறிவிப்பு**

சிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெடின் பின்வரும் கடன்தாரர்களுக்கு தெரிவிக்கப்படுவதுஎன்னவென்றால்,அவர்களால்வங்கியிலிருந்துபெறப்பட்டதங்ககடன்/கள் தொடர்பாக இதுவரை அவர்களுக்கு பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அதிலும் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டபோதிலும் அவர்கள் கடன் தொகையை திருப்பித் தரவில்லை. அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன்மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், வங்கியில் கடனீடாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கடன் பெறப்பட்ட வங்கிக் கிளையில் **காலை 11:00 மணிக்கு ஏலம் விடப்படுவதென** தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடன்தாரர்கள், கணக்கை வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெரிய அளவில் இந்த ஏலத்தில் பங்கெடுக்க முடியும்.

**ஏலத் தேதி 29 ஜூலை 2025 @ காலை 11:00 மணி**

| வ.எண் | கிளை | கணக்கு எண் | கணக்கு வைத்திருப்பவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 104142511922 | ராதிகா G |
| 2 | சென்னை | 104142511994 | ஸ்டெல்லா ஜி மாரி |
| 3 | சென்னை | 104142511284 | P F பெஞ்சமின் |
| 4 | சென்னை | 104142511334 | முரளி S |
| 5 | சென்னை | 104142511532 | ராஜு N C |
| 6 | சென்னை | 104142511879 | J.N.பிரவீன் ராஜ் |
| 7 | சென்னை | 104142511920 | அமலா எஸ் சர்ப்ரசாதம் |
| 8 | சென்னை | 104142511970 | குமார் A |
| 9 | சென்னை | 104142512028 | S Y லக்ஷ்மி |
| 10 | சென்னை | 104142512019 | பிரகாஷ் |
| 11 | சென்னை | 104142512031 | பவானி K |
| 12 | சென்னை | 104142512065 | லைகா |
| 13 | சென்னை | 104142512076 | முகமது சையத் |
| 14 | சென்னை | 104142511306 | கோபு K R |
| 15 | சென்னை | 104142511315 | பிரமோத் F |

எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் இந்த ஏலத்திலிருந்து எந்த கணக்கையும் நீக்கவோ அல்லது ஏலத்தை ரத்து செய்யவோ வங்கி உரிமையைப் பெற்றிருக்கிறது.

**அதிகாரப்பூர்வ அதிகாரி, சிவாலிக் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

## ஆண் நண்பர்களுடன் அதிக நேரம் பேச்சு

# வீடு புகுந்து இளம்பெண் படுகொலை

■ கூலிப்படை ஏவி தீர்த்துக்கட்டினாரா? ■ ராணுவ வீரர் மீது பெற்றோர் புகார்

**சாயல்குடி, ஜூலை 19:** ராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி அருகே நரிப்பையூர் வெட்டுக்காடு கிராமத்தை சேர்ந்தவர் விஜயகோபால். இவரும், தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடை சேர்ந்த ஜெர்மின் (36) என்பவரும், கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். 14 வயதில் மகள், 10 வயதில் மகன் உள்ளனர். விஜயகோபால் உத்தரகாண்ட்டில் எல்லை பாதுகாப்புதுணை ராணுவத்தில் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது. கருத்து வேறுபாட்டால், கடந்த 5 ஆண்டுகளாக இருவரும் பிரிந்து வாழ்வதாக கூறப்படுகிறது.



நேற்று முன்தினம் நள்ளிரவு ஜெர்மின், வெட்டுக்காடு வீட்டில் மகன், மகளுடன் சாப்பிட்டு கொண்டிருந்தார். அப்போது முகமூடி அணிந்து வந்த 2 மர்ம நபர்கள், குழந்தைகள் கண்முன் ஜெர்மினை ஆயுதங்களால் கொடூரமாக வெட்டி கொலை செய்துவிட்டு தப்பினர். இதுகுறித்து சாயல்குடி போலீசார் வழக்கு பதிந்து மர்ம நபர்களை தேடி வருகின்றனர். கொலையான ஜெர்மினின் பெற்றோர், ராமநாதபுரம் எஸ்பி சந்தீஷிடம் கொடுத்த புகார் மனுவில், ஜெர்மினியை அவரது கணவர் விஜயகோபால் தான் ஆள் வைத்து கொலை செய்ய வாய்ப்புள்ளது என கூறியுள்ளனர்.

சாயல்குடி போலீசார் கூறும்போது, "விசாரணையில் ஜெர்மின் பிற ஆண் நண்பர்களுடன் போனில் அதிகமாக பேசியது தெரிய வந்தது. இதனடிப்படையில் தகாத உறவு விவகாரத்தில் கொலை நடந்ததா என விசாரணை நடக்கிறது. கணவர் ஆட்களை வைத்து கொலை செய்திருக்கலாம் என பெண்ணின் பெற்றோர் கூறிய புகார் அடிப்படையிலும் விசாரணை நடக்கிறது" என்றனர்.

# தமிழகத்தில் கூட்டணி ஆட்சிதான்

**அழுத்தமாக சொன்ன தமிழிசை**

**கோவை, ஜூலை 19:** இந்தியாவில் பல மாநிலங்களில் தேஜ கூட்டணி ஆட்சி நடப்பது போல, தமிழகத்திலும் நல்லாட்சி நடக்கும் என்று தமிழிசை தெரிவித்து உள்ளார்.

கோவை விமான நிலையத்தில் பாஜ மூத்த தலைவர் தமிழிசை சவுந்திரராஜன் நேற்று அளித்த பேட்டி: நாமக்கல்லில் சிறுநீரகம் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. தனியார் மருத்துவனைகளில் உடல் உறுப்புகள் விதிமுறைகளை மீறி மாற்று அறுவை சிகிச்சை மூலம் வெளிநாட்டினருக்கு பொருத்தப்பட்டுள்ளது. கூட்டணி ஆட்சி குறித்து டெல்லியில் உள்ள பெரிய தலைவர்கள் பார்த்துக் கொள்வார்கள். நான் அதுபற்றி பதில் சொல்ல மாட்டேன். அதிமுக பாஜ கூட்டணியில் எந்த ஒரு விரிசலும் இல்லை. இதனை எடப்பாடி பழனிசாமி தெளிவாக சொல்லிவிட்டார். மகாராஷ்டிராவில் 78 லட்சம் பேரை பாஜ கூட்டணி அரசு லட்சாதிபதி ஆக்கியுள்ளது.



தமிழகத்தில் நாங்கள் அதிமுக உடன் இருப்பதால் டாஸ்மாக்கை கட்டுப்படுத்த திட்டம் வைத்துள்ளோம். பெண்களுக்கு மாதம் ரூ.1,500க்கு மேல் உதவி தொகை கிடைப்பதற்கு நாங்கள் திட்டம் கொண்டு வருவோம். நாங்க எல்லாம் சேர்ந்து இருக்கிறோம். அதனால் நிச்சயமாக நல்லாட்சி நடக்கும்.

இந்தியாவில் பல மாநிலங்களில் தேஜ கூட்டணி ஆட்சி நடப்பது போல, தமிழகத்திலும் நல்லாட்சி நடக்கும். தேஜ கூட்டணிக்கு எந்த கட்சி வந்தாலும், அது பிரமாண்டமான கட்சி தான். எங்க கூட்டணி பிரேக் ஆகாது. நான் உங்களுக்கு பிரேக்கிங் கொடுக்கவே மாட்டேன். இவ்வாறு அவர் கூறினார்.

## கோவை மாணவி கூட்டு பலாத்காரம் 3 பேருக்கு சாகும் வரை ஆயுள்

**கோவை, ஜூலை 19:** கோவையை சேர்ந்தவர் 16 வயது மாணவி, கடந்த 2019ல் 11ம் வகுப்பு படித்து வந்தார். அதே ஆண்டு நவ.26ம் தேதி இரவு அங்குள்ள பூங்காவில் காதலருடன் மாணவி பேசிக்கொண்டிருந்தார். அங்கு வந்த கும்பல், தங்களை போலீசார் எனக் கூறி மிரட்டி, காதலனை சரமாரியாக தாக்கினர். மாணவியை தூக்கிச் சென்று கூட்டு பாலியல் பலாத்காரம் செய்தனர்.

இதுகுறித்து, கோவை மேற்கு பகுதி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். பின்னர், சீரநாயக்கன்பாளையத்தை சேர்ந்த ராகுல் (21), பிரகாஷ் (22), கார்த்திகேயன் (28), நாராயணமூர்த்தி (30), பப்ஸ் கார்த்தி (27), மணிகண்டன் (32), வடவள்ளி தில்லை நகரை சேர்ந்த மற்றொரு மணிகண்டன் (29) ஆகிய 7 பேரை கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை கோவை போக்சோ கோர்ட்டில் நடந்து வந்தது. இந்த வழக்கை நீதிபதி பகவதியம்மாள் விசாரித்து, மணிகண்டன், கார்த்தி (எ) பப்ஸ் கார்த்திக், மணிகண்டன் (எ) ஆட்டோ மணிகண்டன் ஆகிய 3 பேருக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்து நேற்று தீர்ப்பு கூறினார்.

மேலும், ராகுல், பிரகாஷ், நாராயணமூர்த்தி, கார்த்திகேயன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

**இந்திய அரசு**
**பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்**

**அறிவிப்பு**

பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் (PMRBP)க்கான விண்ணப்பங்களைப் பெறும் செயல்முறை தேசிய விருதுகள் இணைய முகப்பில் (https://awards.gov.in) 01.04.2025 அன்று தொடங்கப்பட உள்ளது என்பது தெரிவிக்கப்படுகிறது. **வீரம், சமூக சேவை, சுற்றுச்சூழல், விளையாட்டு, கலை & கலாச்சாரம் மற்றும் அறிவியல் & தொழில்நுட்பம்** ஆகிய துறைகளில் தேசிய அளவில் அங்கீகாரம் பெறத் தகுதியான குழந்தைகளுக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்தியாவில் வசிக்கும் இந்திய குடிமகனான 5 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 18 வயதுக்கு மிகாத (ஜூலை 31, 2025 நிலவரப்படி), எந்தவொரு குழந்தையும் விருதுகளுக்குத் தகுதியுடையவர்.

எந்தவொரு குடிமகனின் விண்ணப்பங்களும் தேசிய விருதுகள் இணைய முகப்பு https://awards.gov.in மூலம் மட்டுமே பெறப்படும். விருதுகளுக்கான சுய நியமனம் மற்றும் பரிந்துரைகள், இரண்டும் ஆன்லைனில் செய்யப்பட்டால் கருதப்படும். ஆன்லைன் விண்ணப்பங்களைப் பெறுவதற்கான **கடைசி தேதி 15.08.2025.** மேலும் விவரங்களுக்கு, **தேசிய விருதுகள் இணைய முகப்பை** (https://awards.gov.in) பார்வையிடவும்

cbc 46101/11/0014/2526

**V.O.CHIDAMBARANAR PORT AUTHORITY**
**Civil Engineering Department**
**TUTICORIN - 628 004.**
SAGARMALA

**NOTICE INVITING TENDER**

| S. No | Name of Work | Estimated cost Put to tender value (Amount in INR) | Cost of Earnest Money Deposit (EMD) (Amount in INR) | Online Tender opening date |
|---|---|---|---|---|
| 1 | Construction of Compound Wall between Admin Office Building and MMD Building including construction of cattle traps at Administrative office building | 13,03,667/- | 26,074/- | 31.07.2025 |
| 2 | Providing lawn, plants and granite benches around VVIP suites at Port Guest House | 17,83,356/- | 35,667/- | 31.07.2025 |
| 3 | Construction of new Labour toilet at Coastal Berth inside Green Gate in VOC Port Authority. | 12,09,611/- | 24,195/- | 06.08.2025 |
| 4 | Renovation of North Fire Station & Inside Red Gate Operational Area Buildings in VOCPA. | 73,78,766/- | 1,47,580/- | 01.08.2025 |

Note:
For eligible tenderers, downloading of bid documents from the NIC e-tendering website:
i) https://etenders.gov.in/eprocure/app
ii) https://www.vocport.gov.in

Sd/-
CHIEF ENGINEER
VOCPA